## பா.ஜ.க அரசின் வஞ்சகப் போக்கையும் எதிர்கொண்டு

# தமிழ்நாட்டின் பொருளாதாரம் புதிய உச்சத்தை அடைய காரணம் முதல்வரின் கடின உழைப்பே!

## ஒன்றிய அரசே வெளியிட்ட புள்ளிவிவரங்களைச் சுட்டிக்காட்டி – தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

சென்னை, ஏப். 8-

**பொருளாதாரத் துறையில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு புதிய உச்சங்களைத் தொட்டிருப்பதற்கு காரணம் திராவிட நாயகன் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் கடின உழைப்புதான் என்றும், திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றம் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு துணையாக இருக்கிறது என்றும் தொழில்-முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.**

அவரது பேட்டி வருமாறு.

கழகத் தலைவர் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களின் கடின உழைப்பின் காரணமாக தமிழ்நாடு ஒவ்வொரு ஆண்டும் பொருளாதாரத்தில் புதிய உச்சங்களை தொட்டு வருகிறது ஒவ்வொரு நாளும் அவரது கடினமான அந்த உழைப்பின் காரணமாக தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி சென்றடைந்து கொண்டிருப்பதனால் இன்று ஒன்றிய அரசின் தரவுகள் படியே தமிழ்நாடு ஒரு புதிய மகத்தான உச்சத்தை தொட்டிருக்கிறது.

**மகத்தான வளர்ச்சி!**

பொருளாதார வளர்ச்சியில் 9.69% என்ற ஒரு அற்புதமான உச்சத்தைத் தொட்டு, இந்திய மாநிலங்களில் நம்பர் ஒன் மாநிலமாக இன்று தமிழ்நாடு மிளிர்கிறது, ஒளிர்கிறது. அதற்கு காரணம் நமது திராவிட நாயகன் அவர்களின் கடின உழைப்பு. தொடர்ந்து அனைத்து செக்டார்களிலும் எல்லா பகுதிகளிலும் வளர்ச்சி சென்றடைய வேண்டும், எல்லோருக்கும் எல்லாம் கிடைத்த வேண்டும், பரவலாக்கப்பட்ட வளர்ச்சி உறுதி செய்யப்பட வேண்டும், என்ற நோக்கத்துடன், பதவிப் பொறுப்பேற்றிருந்த முதல் நாளில் இருந்தே அவர் செயல்பட்டதனால் இப்படிப்பட்ட ஒரு மகத்தான வளர்ச்சியை எட்டியுள்ளோம்.

**நம்பர் ஒன் மாநிலம்!**

கோவிட் காலத்தில் அவர் ஆட்சி பொறுப்பு ஏற்றபோது, அந்த முதல் ஒன்றரை ஆண்டுகள் எவ்வளவு பெரிய நெருக்கடி இருந்தது என்று எல்லாருக்கும் நன்றாக தெரியும் அதற்கு முன்னர் ஒரு மோசமான நிர்வாகம் கொண்ட முந்தைய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட அந்த பொருளாதார சீர்கேட்டுடனும் கோவிட் பெருந்தொற்றுக்காலம் என இரண்டு நெருக்கடிகளையும் ஒன்றரை ஆண்டு காலம் எதிர்கொண்டு, கடினமாக உழைத்து மீண்டும் பேக் டு ட்ராக் கொண்டு வந்து தடம் பிறழ்ந்து கடந்த தமிழகத்தை மீண்டும் வளர்ச்சி பாதையில் அந்த தடத்தில் ஏற்றி இன்று தமிழ்நாட்டை இந்தியாவின் உற்பத்தி மையமாக, பொருளாதாரவளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலமாக மாற்றி வரலாறு படைத்திருக்கிறார். அதாவது ஒரு 10 ஆண்டு காலமாக இல்லாத ஒரு வளர்ச்சியை இன்று தமிழ்நாடு பெற்றுள்ளது என்றால் அதற்கு காரணம் முதலமைச்சரின் உழைப்பு. எனவே தமிழ்நாடு மக்கள் சார்பாகவும், தமிழ் மக்களில் ஒருவன் என்ற முறையிலும், இந்த வளர்ச்சியில் பங்கு பெறக்கூடிய துறையில் அவரால் பொறுப்பளிக்கப்பட்டவன் என்ற முறையிலும் நமது முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மகத்தான தருணத்தில் மிகுந்த நன்றியை நாம் எல்லோரும் சேர்ந்து கூற வேண்டும்.

**பரவலாக்கப்பட்ட வளர்ச்சி!**

இந்த வளர்ச்சியை எடுத்துக்கொண்டால், உற்பத்தித் துறை சார்ந்த விவரங்களை நான் தெரிவிக்கிறேன். நிதியமைச்சர் அவர்கள் மற்ற விவரங் களைத் தெரிவிக்க இருக்கிறார். 15 லட்சத்து 71ஆயிரத்து 368 என்று 2023-24ல் இருந்த நமது மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதாரம் இப்போது 17லட்சத்து23ஆயிரத்து 698 என்று வளர்ந்திருக்கிறது. இதற்கு மிக முக்கிய காரணம் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி. மற்ற சில மாநிலங்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் உற்பத்தி சார்ந்த துறைகளில் கவனம் செலுத்துவார்கள். சில மாநிலங்களில் சர்வீஸ் செக்டார் எனப்படும் சேவைத் துறையில் மட்டும் கவனம் செலுத்துவார்கள். உதாரணத்திற்கு, குஜராத்தை எடுத்துக் காண்டால், பெரிய அளவில் உற்பத்தி துறையை சொல்வார்கள். மகாராஷ்ட்ராவிலும் உற்பத்தி முதன்மையாக இருக்கும் ஓரளவுக்குத்தான் சேவைத் துறைகள் இயங்கும். ஆனால், தமிழ்நாடு மட்டும்தான் இந்த இரண்டு துறைகளிலும் சரிசமமான வளர்ச்சியுடன் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நிற்கும். உற்பத்தி துறையிலிருந்து பேக்கிங் துறை, அதனை சார்ந்த ஹோட்டல் துறை என ஒவ்வொரு துறையும் வளர்ச்சி பெறக்கூடிய நிலையைத் தமிழ்நாட்டில் பார்க்கலாம். விமான சேவை வரை தமிழ்நாட்டில் வளர்ச்சி பெற்றுள்ளது. தற்பாது 9%க்கு மேல் வளர்ச்சி பெற்றுள்ளது என்றால் அதற்கு காரணம் உற்பத்தி துறையும் சேவைத் துறையும் இணைந்து இந்த வளர்ச்சியைக் கொடுக்கக் கூடிய தனித்துவமிக்க மாநிலமாக, நம்பர் ஒன் மாநிலைமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

**முதல்வரின் தொலைநோக்கு சிந்தனை!**

இதில் மற்ற மாநிலங்களில் இல்லாத ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி. அதிகளவில் நகர்ப்புறமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையானதாக உள்ளது. பரவலாக்கப்பட்ட வளர்ச்சி கிடைத்ததால் ஒவ்வொரு கிராமப் பகுதியிலும்கூட பொருளாதாரம் நல்ல நிலையில் உள்ளது. எனவேதான் நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய தொலை நோக்கு சிந்தனையான ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை நாம் அடைய வேண்டு மென்றால், ஒவ்வொரு கிராமத்திலேயும் பொருளாதாரம் வளரவேண்டும். அதில் அவர் மிக கவனம் செலுத்துகிறார். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், அதனையடுத்து ஆண் மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டம் எனக் கொண்டு வருகிறார் என்றால் இவை எல்லாம் ஒருங்கிணைந்து ஒவ்வொரு பகுதியிலும் திறமையான ஆட்களை உருவாக்கி, அந்த இடங்களில் முதலீடுகளையும்



ட்தொழிற்சாலைகளையும் கொண்டு வரக் கூடிய அளவிற்கு பரவலான வளர்ச்சிக்கு வித்திடுகிறது.

இன்றைய நிலையில், தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் தொழிற்சாலையை அமைக்கலாம். அங்கு தேவைப்படும் மனித ஆற்றலை அங்கேயே கிடைக்கும்படி முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை செயல்படுத்தி உருவாக்குகிறார். நான் முதல்வன் திட்டம் மூலம் அந்தந்தப் பகுதியிலேயே திறன்மிக்கவர்களை உருவாக்குகிறார். முதலமைச்சர் அவர்களின் இந்த ஒட்டுமொத்தமான உழைப்பை உள்வாங்கிக் கொண்டு பார்க்க வேண்டும். அப்போதுதான் இந்த வளர்ச்சியின் பிரம்மாண்டம் தெரியும்.

**முதல்வரின் உழைப்புக்கு கிடைத்த மகத்தான பரிசு!**

கோவிட், முந்தைய ஆட்சியின் மோசமான நிர்வாகம் எல்லாவற்றையும் தாண்டி தற்பாது, தன்னுடைய ஆட்சியின் நான்காவது ஆண்டு முடிவில், இப்படி ஒரு மகத்தான பரிசு முதலமைச்சர் அவர்களின் உழைப்புக்கு கிடைத்திருக்கிறது. மற்ற மாநிலங்களின் தொழில்வளர்ச்சியும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும் ஒப்பிடும்போது இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.69 என்று உள்ளது. ஆந்திரா மாநிலம் 8.21 தான். ராஜஸ்தான் 7.82, கர்நாடகா 7.37, தெலங்கானா 6.79, பெரியளவில் தொழிற்சாலை கள் உள்ள மகாராஷ்டிரா 7.27தான். நம்மை விட பெரிய மாநிலங்கள், குறிப்பாக ஒன்றிய அரசினுடைய ஒட்டுமொத்த அரவணைப்பில் இருக்கிற மாநிலங்கள் எல்லாம் கூட கம்மியாகத்தான் வளர்ந்திருக்கிறது. ஆனால், “ஒன்றிய அரசான நீங்கள் கொடுக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, என் மாநிலத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்” என்று சொல்லி, நம் திராவிட நாயகன் அவர்கள் கடின உழைப்பை வழங்கிய நமது மாநிலம் தான் இன்று இவ்வளவு பெரிய வளர்ச்சியை கண்டிருக்கிறது. ஒன்றிய அரசு பாரபட்ச வேலை எல்லாம் பண்ணாமல், சரியான ஜனநாயக ரீதியான, கூட்டாட்சி நடைமுறையை மதித்து நடந்திருந்தால் நாம் இன்னும் பெரிய வளர்ச்சியையும் அடைந்திருக்க முடியும். இதைத்தான் நாங்கள் சொல்லிட்டே இருக்கோம். நீங்கள் தமிழகத்தை வஞ்சிக்கிறீர்களே.. நீங்கள் தமிழகத்தை வஞ்சிக்கும் போது இந்தியாவையும் சேர்த்து வஞ்சிக்கிறீர்கள்.

இந்தளவு பொருளாதார வளர்ச்சி பெறக்கூடிய அளவில் செயல்படும் தமிழ்நாடு உங்களுடைய வஞ்சகப் போக்கைக் கடந்து இந்த வளர்ச்சியை அடைந்திருக்கிறது. நீங்கள் எங்களையும் சரியான முறையில் நடத்தி, எங்களுக்கு கூடுதலாக எதையும் கேட்கவில்லை, தரவேண்டியதை தந்திருந்தால் இன்னும் கூட வளர்ந்திருப்போம். இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையில் கூட தொடர்ந்து இந்த மாநிலத்தை வளர்த்து எடுத்திருக்கும் திராவிட நாயகன் அவர்களுக்கு மிகப்பெரிய வெற்றி இது.

பல துறைகளில் ஒன்றிய அரசு தர வேண்டிய நிதி கிடைக்காதபோதும் இந்த வளர்ச்சி கிடைத்திருக்கிறதென்றால் அதற்கு காரணம் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களுடைய உழைப்பு. அதைத்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அன்றே சொன்னார், உழைப்பு. உழைப்பு.. உழைப்பு என்று. ஒவ்வொரு நாளும் உழைப்பு.

**மற்ற நாடுகளுடன் போட்டி!**

இப்போதுகூட இந்த வளர்ச்சியைப் பார்த்துவிட்டு சும்மா இருக்க மாட்டார். அமெரிக்காவின் டாரிஃப்போல பல நாடுகளில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும் சூழலில், நம்முடைய நிலை என்ன, வளர்ச்சியை எப்படி மேம்படுத்துவது என்று ஆலோசிப்பார். அமெரிக்க டாரிஃப் மூலமா முட்டை விலை உள்பட உள்ளூர் பொருளாதார அளவில் மாற்றங்கள் ஏற்படுகிறது என்கிறார்கள். எந்த நாட்டுக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என்பது இன்னும் முழுமையாகத் தெரியவில்லை. அதையெல்லாம் கவனிக்கச் சொல்கிறார் முதல்வர். ஏனென்றால் நாம் மற்ற மாநிலங்களுடனல்ல, மற்ற நாடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறோம். அந்தளவுக்கு முன்னேறிய மாநிலமாக நாம் இருக்கிறோம். அந்த அளவில் நம்முடைய முதல்வர் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்.

எங்களுக்கெல்லாம் காலையிலேயே போன் செய்து, இதை பார்த்தீங்களா என்று கலைஞரைப் போல கேட்டுக்கொண்டிருக்கிறார் நம் முதலமைச்சர். ஒவ்வொரு நாளும் பேப்பர்ல வர நியூஸ்களை பார்த்து அதற்கேற்ப திட்டங்களை வகுப்பதும், முடிவுகளை எடுப்பதுமாக, உலக அளவிலான போக்கினை அறிந்து, உற்பத்து துறையில், சேவைத் துறையில், ஐ.டி. துறையில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து, அதற்கேற்ப திருத்தங் களை செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அதுதான் இத்தகைய வளர்ச்சியை அடைவதற்கு சாதகமாக இருப்பதாக நினைக்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்களும் வளர்ச்சி பெறும் வகையில் பரவலாக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்காக முதலமைச்சர் அவர்கள் உழைப்பதினால்தான் தமிழ்நாடு பல இலக்குகளிலும் இந்தியாவின் சராசரியைவிட உயர்ந்திருக்கிறது. நாம் மற்ற நாடுகளுடன் போட்டி போடுகிறோம். நம்மிடம் மற்ற மாநிலங்கள் கற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டியளித்தார்.

---

## கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

## குன்றாண்டார் கோவில் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றியம், கீரனூர் பேரூர் கழகம் சார்பில்

# கீரனூரில் கழகத்தலைவர் பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம்!

### அமைச்சர் கோவி.செழியன் - கவிச்சுடர் கவிதைப்பித்தன் - த.சந்திரசேகரன் சிறப்புரை!

புதுக்கோட்டை, ஏப். 8-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார் கோவில் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றியங்கள் மற்றும் கீரனூர் பேரூர் கழகம் சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் கூட்டம் 5.3.2025 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் கீரனூர் கலைஞர் திடலில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சிறப்புரையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கழக விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், தலைமை கழக பேச்சாளர் கீரை.அஸ்ரப் அலி, இளம் பேச்சாளர் தமிழினியன், உள்ளிட்டோர் கழகத் தலைவர் அவர்களை வாழ்த்தி உரையாற்றினார்கள்.

முன்னதாக குன்றாண்டார்கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.சேட்டு, மேற்கு ஒன்றிய செயலாளர் ஓ.எஸ். வெங்கடாசலம், மத்திய ஒன்றிய செயலாளர் சி.சண்முகம், கீரனூர் பேரூர் செயலாளர் பி.அண்ணாதுரை ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள். நிகழ்வில் மாநில கழக நிர்வாகிகள் கழக தொண்டரணி துணைச் செயலாளர் சுப.சரவணன்,

மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாவட்ட பொருளாளர் துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கீரை.தமிழ் ராஜா சு.சண்முகம், ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ். சந்திரன், தவ.பாஞ்சாலன், ஆர்.ஆர்.சாமிநாதன், புதுக்கோட்டை மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஸ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் த.செல்வம், அணிகளின் அமைப்பாளர்கள் முனைவர் சி.குறிஞ்சிவாணன். சி. அரங்கநாயகம், புத்தாம்பூர் எம்.சுப்பையா,

மு.கலைஞர் கருணாநிதி, ஆ.ராஜேந்திர சோழன், கே.எம்.கே.ரவிக்குமார், ஆ.வீரசிங்கம், தங்க.கருணாநிதி, எஸ்.ஆரோக்கியசாமி, வி.மணிவேல், அழகு ராஜேந்திரன், குளவை ஓ.ஆறுமுகம், குளத்தூர் ஜி.மணிராஜன், என்.குருமூர்த்தி, கே.ஆர்.பாலமுத்து, சுருளிமுத்து, எஸ்.ராஜா, முத்துக்குமார், வி.எஸ். பழனி, பி.சி.என்.கண்ணன், முத்து ராங்கியர், யு.எம். கிருஷ்ணமூர்த்தி, பி.எஸ். சூசை, சி.முத்து, வி.ராஜராஜசோழன், கே.ஆர்.கரிகாலன், சின்னப்பா, ரவி, காத்தையா, ராஜ்குமார், சின்னதுரை, பிஸ்மி சலீம்தீன், க.வீரையா, தங்கம்மாள் முருகன், எல்.சௌந்தர்ராஜன், உள்ளிட்ட பேரூராட்சி கவுன்சிலர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர். முடிவில் மாவட்ட சிறுபாண்மையினர் பிரிவு தலைவரும் கீரனூர் பேரூராட்சி துணை தலைவருமான எம்.ஏ.எம்.இம்தியாஸ் நன்றி கூறினார். முன்னதாக வடக்கு மாவட்ட செயலாளர் கே கே செல்ல பாண்டியன் உயர் கல்வித் துறை அமைச்சர் கோ.விசெழியனுக்கு ஆள் உயர ரோஜா மாலை அணிவித்தும் வெள்ளிவால் நினைவு பரிசாக வழங்கினார்.

---

## தொகுதி மறுவரையறை என்ற பெயரில்

# தென்னிந்திய மாநிலங்கள் பாதிக்கப்படும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. சதித்திட்டம்!

### திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் - மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் பேட்டி!

திருப்பூர், ஏப்.8–

வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மாநிலங்கள் பாதிக்கப்படும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. சதித்திட்டம் தீட்டுவதாக திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் கூறினார்.

அவர் கூறியதாவது : தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழ்நாடு உள்பட தென்னிந்தியாவில் உள்ள மாநிலங்கள் பாதிக்கப்படும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு சதித்திட்டம் தயார் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 39ல் இருந்து 31ஆக குறையும். இது மக்களை பிளவுப்படுத்துவதற்கான பா.ஜ.க.வின் சதியாகும்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழ்கிறார். அவர் நமது தமிழ்நாட்டின் நலனுக்காக மட்டுமின்றி தொகுதி மறுவரையால் பாதிக்கப்படும் அனைத்து மாநிலங்களுக்காகவும் முன்னணியில் நின்று போராடி வருகிறார்.

பாராளுமன்றத்தில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, வடஇந்தியாவில் மக்கள் பிரதிநிதித்துவத்தில் குறைபாடு ஏற்படுவதாக கூறினார். அப்படி என்றால் வடஇந்தியா, தென்னிந்தியா என்று மக்களை பிளவுப் படுத்தி ஆட்சியில் அமர பா.ஜ.க. தயாராகி வருகிறது.

இந்த பிரச்சினை தொடர்பாக பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று தமிழக எம்.பி.க்கள் வலியுறுத்திய நிலையில், அதைப்பற்றி பேசுவதற்கு கூட பா.ஜ.க. தயாராக இல்லை. வக்பு சட்ட மசோதா தாக்கல் செய்தது கூட இஸ்லாமியர்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இது கண்டிக்கத்தக்கது. இந்தியாவில் பா.ஜ.க. தொடர்ந்து ஆட்சி செய்வது இந்திய இறையாண்மைக்கு, கூட்டாட்சிக்கு ஆபத்தானதாகும்.

பா.ஜ.க. பலமாக, ஆட்சியில் உள்ள மாநிலங்களில் தொகுதி மறுவரையறை என்ற பெயரில் எம்.பி.க்களின் எண்ணிக்கையை அதிகரித்து, ஆட்சியமைக்க திட்டம் தீட்டி வருகிறது. நிதி பகிர்விலும் தமிழ்நாடு உள்பட பா.ஜ.க. அல்லாத மாநிலங்களை ஒன்றிய அரசு வஞ்சித்து வருகிறது.

ஒன்றிய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியை கடந்த 4.5 மாதங்களாக வழங்காததால், தமிழ்நாட்டில் 24 மார்ச் 2025 நிலவரப் படி இத்திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய நிலுவை ரூ.2,985 கோடி (இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஐந்து



கோடி) மற்றும் MATERIAL COMPONENT (பொருட்களுக்கான) நிலுவை தொகை ரூ.1,048 கோடி (ஆயிரத்து நாற்பத்தி எட்டு கோடி) சேர்த்து மொத்த நிலுவை தொகை ரூ 4,034 கோடி (நான்காயிரத்து முப்பத்தி நான்கு கோடி) வழங்க வேண்டியுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி இந்தியாவின் நம்பர் 1 முதலைசர் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே 13.01.2025 அன்று ஒன்றிய பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். ஆனால் இன்று வரை நிதி விடுவிக்கப் படவில்லை. 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய ரூ.4,034 கோடியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடந்த வாரம் தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்தப்பட்டது. அத்திக்கடவு அவினாசி திட்டத்தை பொறுத்தவரை விடுபட்ட பகுதிகளுக்கும் அந்த திட்டம் விரிவாக்கம் செய்யப்படும். திருப்பூர் மாநகராட்சியில் மட்டும் வரி உயர்வு செய்யப்படவில்லை. வரி உயர்வு என்பது தமிழ்நாடு முழுவதும் ஒரே உயர்வு தான். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப் பட்டு அரசின் கவனத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது என்று திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் செய்தியாளர்களிடம் கூறினார்.


திருப்பூர் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் க.நடராஜன், வடக்கு மாநகர செயலாளர் ஈ.தங்கராஜ், பகுதி செயலாளர்கள் கொ.ராமதாஸ், மின்னல் அ.நாகராஜ், வெ.ஜோதி, மாநகர பொருளாளர் அ.சரவணக்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பெரியார் காலனி எம்.எஸ்.மணி, சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணைத் தலைவர் வி.வி.ஜி.காந்தி உள்பட பலர் உடனிருந்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா ஏ.டி. வேலு

### ஏப்ரல் 8 (2016)



**கழகத்தில் ஐம்பது ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவர்.**

**ஒன்றிய அவைத் தலைவர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து, திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியத்தில் கழகப் பணியாற்றியவர்..**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக, மிசாவில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா அருணாசலம்

### ஏப்ரல் 8 (1981)



**கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராகி, புதுக்கோட்டையின் முதல் நகரச் செயலாளராகவும், நீண்டகாலமாக பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.**

**மும்முனைப் போராட்டத்தில் பங்கேற்றதோடு, மிசா கைதியாக ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் உரையாற்றும்போது “எனது அருமை நண்பர் மிசா அருணாசலம்” என்று நினைவு கூர்ந்து குறிப்பிடுவதே இவருக்குரிய புகழாரமாக அனைவரும் கருதுகிறார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**